உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 208

திங்கட்கிழமை
22 ஜூன் 2026

ஆனி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## பெண்களை இலக்குவைத்து பெரும் மோசடி!

பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 22
சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக பெண்களை ஏமாற்றி, நிதி மோசடி மற்றும் பாலியல் சுரண்டல்களில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பொலிஸார் அவசர எச்சரிக்கை »15



## பல சட்டவரைவுகள் இந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு

கொழும்பு, ஜூன் 22
நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்துக்கான திருத்தங்கள் மற்றும் புதிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் தடுப்புச் சட்டவரைவு உட்படப் பல முக்கியமான சட்டவரைவுகள் இந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச்சட்டம், கணினிக் »15

# செம்மணி மனிதப்புதைகுழியில் 400ஐ தாண்டின என்புக்கூடுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 22
**செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுகள் நடைபெற்றுவரும் நிலையில், மீட்கப்பட்ட என்புக்கூடுகளின் எண்ணிக்கை 400 ஐத் தாண்டியுள்ளது. நேற்று புதிதாக 11 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேநேரம், 7 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.** »15

## சுற்றிவளைப்பு; 798 பேர் கைது

விரிவு பக்கம்:-05

## திட்டமிட்ட திகதியில் உயர்தரப் பரீட்சை!

கல்வி அமைச்சு திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 22
2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை மேலும் பிற்போட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகளை கல்வி அமைச்சு நிராகரித்துள்ளதுடன், பரீட்சையை ஒத்திவைக்க வேண்டிய »15





## ஜெயானந்தமூர்த்தி எம்.பி. நேற்றுக் காலமானார்

விரிவு பக்கம்:-14

## எஸ்.ரி.எப். – மக்கள் முறுகல் 14 பேர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கும் முயற்சியின்போது, விசேட அதிரடிப்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பெண்கள், »15

போலி நிறுவனங்கள் மூலம்

## டொலர் கடத்தலைத் தடுக்க கடுமையான நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22
பதிவு செய்யப்பட்ட போலி நிறுவனங்கள் மூலம் சட்டவிரோதமாக டொலர் கடத்தப்படுவதைத் தடுக்க, அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து கடுமையான கட்டுப்பாட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. சுமார் 85 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பெரும்மோசடி அண்மையில் »14

## அதிகாரத்துக்காக எதையும் செய்வார்கள் ராஜபக்சக்கள்

சுரேஷ் சாலே விடயத்திலும் அதுவே நடக்கிறது
அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

விரிவு பக்கம்:-15

தரம் குறைந்த நிலக்கரியால்

## திரும்பியது கப்பல்!

கொழும்பு, ஜூன் 22
அவசர கொள்முதல் அடிப்படையில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஐந்து நிலக்கரி கப்பல்களில், தரம் குறைந்த நிலக்கரியைக் கொண்ட ஒரு கப்பல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று வலுசக்தி அமைச்சின் செயலாளர் ஜி.எம்.ஆர்.டி அப்பொன்ஸு தெரிவித்துள்ளார். »15

INTERNATIONAL MONETARY FUND

## வருகின்றது ஐ.எம்.எப். குழு!

முக்கியமான சந்திப்புகளில் பங்கேற்கும்

கொழும்பு, ஜூன் 22
சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழுவொன்று எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. அந்தக் குழுவி »15



முச்சந்தி முனி

"உந்த இணையங்கள், போன் பாவனையில நாங்கள் எச்சரிக்கையா இருந்தா ஒருத்தரும் மோசடி செய்யேலாது கண்டியளோ"

## அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு நம்பிக்கையில்லா பிரேரணை!

எதிர்க்கட்சிகள் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 22
அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் எதிரணிகள் ஆலோசனை நடத்திவருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
சிங்கள வார இதழொன்று இந்தத்தகவலை வெளியிட்டுள்ளது.
மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் நிலவும் நீதிபதிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக் »15

## இலங்கைக்கு வருகின்றார் அமெரிக்க உயர் அதிகாரி!

கொழும்பு, ஜூன் 22
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் போல் கபூர், உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார்.
இந்தப் பயணத்தின் போது, அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4467 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 03 23 29 40 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1534 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 05 31 43 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0493 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 5 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2573 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 11 18 63 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6225 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 5 6 4 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2255 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 21 30 38 66 |
| விசேட எழுத்து | F |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 21.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0341 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 26 39 54 |

# செம்மணிப் புதைகுழி விவகாரம் சர்வதேச விசாரணை அவசியம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

**யாழ்ப்பாணம்,ஜூன் 22**

**செம்மணிப் புதைகுழி தொடர்பாக உண்மைகளை முழுமையாக வெளிக்கொணரவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவும் சர்வதேச விசாரணை அவசியம் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

செம்மணிப் புதைகுழிக்கு, நீதி அமைச்சர் நேரடியாக வருகைதந்து இதுதொடர்பில் விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படும் என உறுதியளித்திருந்தாலும், விசாரணைகள் மட்டுப்படுத்தப்படக்கூடாது. கிருஷாந்தி கொலைவழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது சிறையில் உள்ள சோமரத்ன ராஜபக்ச பல ஆண்டுகளாக செம்மணி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட் டுள்ளதாகவும், கொழும்புத்துறை, அரியாலை உள்ளிட்ட பகுதிகளிலும் புதைகுழிகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, சம்பவங்களுடன் தொடர்புடைய தகவல்களை வழங்கக்கூடிய சோமரத்ன ராஜபக்சவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து அவர் சுட்டிக்காட்டும் இடங்களில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 400ஐ நெருங்கும் நிலையில் இந்த விவகாரம் மிகப்பெரிய மனித உரிமைச் சிக்கலாக மாறியுள்ளது. இலங்கையில் இத்தகைய பழமையான மனித எச்சங்களின் அடையாளங்களைத் துல்லியமாகக் கண்டறிவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் போதுமான அளவில் இல்லை.

எனவே சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் கூடிய சுயாதீன சர்வதேச விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும்.

இந்த விசாரணையின் மூலம் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது மட்டுமல்லாது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவதும், எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் வழிமுறைகளை உருவாக்குவதுமாக இருக்கவேண்டும். மனித உரிமை அமைப்புகள், சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விவகாரம் தொடர்பாக உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் வலுவான குரலை எழுப்பவேண்டும்-என்றார். (க-26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0933 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| A | 2 9 7 5 8 6 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3199 | I | 21 30 51 59 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 09 11 27 71 | 5360 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 1029 | 06 25 45 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 06 10 45 62 | 4911 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 12 | 08 11 32 73 | 2375 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| H | 23 51 55 57 | 3025 |



**வடக்கில்**

## பேருந்து, ரயில் சேவைகளை ஒருங்கிணைக்கும் மையங்கள்!

யாழ்ப்பாணம்,ஜூன் 22

பேருந்து மற்றும் ரயில் சேவைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் பிரதான நிலையங்களை, வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று இலங்கை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டலில், நாடளாவிய ரீதியில் பன்முகப் போக்குவரத்து மையங்களை அமைக்கும் செயற்றிட்டத்தில், இந்த நிலையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-27)

## பொலிஸாருக்கு இடையூறு நால்வருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூன் 22

தெரணியாகல பகுதியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தெரணியாகல பகுதியில் போதைப்பொருள் சோதனைக்காகச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழுவுக்கும், அப்பகுதியைச் சேர்ந்த சிலருக்கும் இடையே கடந்த 19ஆம் திகதி பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்குக் காயம் ஏற்படுத்தியமை, கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் 'ஐஸ்' போதைப்பொருளை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# கரீபியன் நாட்டின் அமைதிக்காக இலங்கைப் படையினர் பயணம்

கொழும்பு,ஜூன் 22

வன்முறைக் கும்பல்களின் ஆயுத ஆதிக்கத்தினால் சட்டம் ஒழுங்கு முழுமையாகச் சீர்குலைந்துள்ள கரீபியன் நாடான ஹெய்டியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட முப்படையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினரை உள்ளடக்கிய விசேட பாதுகாப்புப் படையணியை அனுப்புவதற்குப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை இராணுவ வரலாற்றில் முதன்முறையாக, மேம்படுத்தப்பட்ட வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்யும் ஆபத்தான பணிகளுக்காக இராணுவப் பெண் பொறியியலாளர் பிரிவொன்று இக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடாவின் முழுமையான ஆதரவுடன் ஹெய்டி இடைக்கால அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே, சர்வதேச அமைதி காக்கும் பணியில் இலங்கை தற்பொழுது பங்காளியாக இணையவுள்ளது. (ச-இ)

**ஐ.நா. குழுவின்**

## சித்திரவதைத் தடுப்பு அறிக்கை இலங்கை அரசிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூன் 22

இலங்கைக்கு 9 நாள்கள் பயணம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் சித்திரவதைத் தடுப்புக்கான உபகுழுவின் பிரதிநிதிகள், தங்களது கள ஆய்வுகளின் அடிப்படையிலான இரகசிய முதற்கட்ட அவதானிப்பு அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த அறிக்கை கையாள்வதில் உள்ள சர்வதேச விதிகளின் படி அரசாங்கம் அனுமதித்து கோரிக்கை விடுத்தால் மட்டுமே பொதுவெளியில் பகிரங்கப் படுத்தப்படும்.

சித்திரவதைகளைத் தடுப்பதிலும் கைதிகளின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் மற்றும் சவால்கள் குறித்து மதிப்பிடுவதே இந்தக் குழுவினரின் முக்கியமான நோக்கமாகும். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கில் 70 வீதமானோர் உயர்தரத்துக்குத் தகுதி!

## 566 மாணவர்களுக்கு 9 ஏ

**யாழ்ப்பாணம்,ஜூன் 22**
**2025 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தில் 70.1 சத வீதமானோர் உயர்தரப்பிரிவில் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள் ளனர்.**

அதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் 566 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். அத்துடன், அகில இலங்கை ரீதியான மாகாணமட்ட அடைவு நிலைகளின் அடிப்படையில், இம்முறை வடக்கு மாகாணம் தேசியமட்டத்தில் 8ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு தரவுகளுடன் ஒப்பிடுகையில், இம்முறை மாணவர்களின் உயர்தரத்துக்கான தேர்ச்சி வீதத்திலும், தேசியமட்ட தரவரிசையிலும் வடக்கு மாகாணம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதே வேளை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், 627 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-27,66)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் சீனர் கைது



கொழும்பு,ஜூன் 22
சுமார் ஒரு கோடியே 32 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கடத்திவர முயன்ற வெளிநாட்டுப் பயணி ஒருவர், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டவர் சீன நாட்டைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
அவர் சீனாவில் இருந்து தாய்லாந்தின் பெங்காக் நகருக்கு வந்து, அங்கிருந்து தாய்லாந்து ஏர்வேஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளார். (ச-இ)

## மகாஜனக் கல்லூரியில் நிறுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 22
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக நியூசவுத் வேல்ஸ் மூத்த தொழில்நுட்ப ஆலோசகர் கலாநிதி பா.விக்னேஸ்வரன் பங்கேற்கவுள்ளார்.
நினைவுப்பேருரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் நா.அம்பிகைபாகன் நிகழ்த்தவுள்ளார். (ச-இ)



## சாமர சம்பத் வழக்கு நவம்பர் விசாரணைக்கு

கொழும்பு,ஜூன் 22
நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. கொழும்பு தலைமை நீதவான் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தக்கட்டளைபிறப்பிக்கப்பட்டது.
சாமர சம்பத் தசநாயக்க ஊவா மாகாணசபையின் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், மாகாண சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புத்தொகைகளை முதிர்ச்சியடை வதற்கு முன்னரே சட்டவிரோதமான முறையில் திரும்பப் பெற்றதன் மூலம், அரசாங்கத்துக்கு 17.3 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## கிராம வறுமை ஒழிப்பு கனடா கைகோர்ப்பு!

கொழும்பு,ஜூன் 22
இலங்கையில் கிராமப்புற வறுமை ஒழிப்பு மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டும் திட்டங்களுக்கு கனடா முழுமையான ஆதரவை வழங்கும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் தெரிவித்துள்ளார். கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலவுக்கும் கனேடிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.
இதன்போது இலங்கையின் தேசிய வறுமை ஒழிப்புத் திட்டமான 'பிரஜா சக்தி' வேலைத்திட்டம் குறித்து அமைச்சர் உபாலி பன்னில உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்ததுடன், அதனை செயற்படுத்துவதற்கு கனடாவின் ஆதரவையும் கோரியிருந்தார். (ச-இ)

## ஒப்பீஸ் அதர்ச்சிகள்-1

சுடலைக்கு நடுச்சாமத்தில போகக்கூட பயப்பிடாதவைகூட, உந்தக் கச்சேரி, டீ.எஸ். ஒப்பீஸுக்குப் போறதெண்டால் குலைப்பன் காய்ச்சல் வந்தவை மாதிரி நடுங்குவினம். அந்தளவுக்கு உந்த அரசாங்க ஒப்பிஸுகளை அங்க உள்ள அதிகாரிமார் ஒரு காட்டுத் தர்பார் நடத்துவினம். எப்பவும் அந்த ஒப்பீஸிகளில் செத்தவீடு நடந்த மாதிரித்தான் எல்லாரும் முகத்தை வைச்சுக்கொண்டு இருப்பினம். அங்க போற சனத்தை ஏதோ பிச்சையெடுக்க வந்தவைமாதிரித்தான் இளக்காரமாப் பாப்பினம். ஏன் வந்திருக்கினம்? எண்டு ஒரு சொல்லுக் கேக்காயினம். தாங்களுண்டு தங்கட போன் உண்டு எண்டு கடும் பிஸியா இருப்பினம். இல்லாட்டி அக்கம் பக்கத்தில இருக்கிற மற்ற ஒப்பீஸர்மாரோட 'உந்த சாறி நல்லா இருக்கு. அந்த சாறி நல்லா இல்லை' எண்டு நாட்டின்ர பொருளாதாரத்தை உலக அளவில உயர்த்திறமாதிரி கதைச்சுக் கொண்டிருப்பினம். ஒரு அலுவலும் நடக்காது.

'சரி எவ்வளவு நேரம் தான் இப்பிடியே வெய்ட் பண்ணி வேக்காடாகிறது?' எண்டு ஆரும் போய் 'நேரம் போகுது, எங்கட அலுவல் எப்ப முடியும்?' எண்டு கேட்டால் உடன அதிகாரிமாருக்கு கோபம் மூக்கில வந்திடும். வள் சுள்ளெண்டு சனத்தில பாயத் தொடங்கிடுவினம். வெறிநாய் கடிச்சால்கூட அப்பிடியிருக்காது. அந்தளவுக்கு வார்த்தையாலையே வெருட்டி உருட்டுவினம். தங்களுக்கு வேண்டப்பட்டவை வந்தால் அவைக்கு முந்திக்கொண்டு எல்லா வேலையையும் செய்து குடுத்து அனுப்புவினம். அதையும் ஏனெண்டும் கேக்கமுடியாது. கேட்டால், அப்பிடிக் கேட்டவரின்ர அலுவலை இன்னும் இழுத்தடிப்பினம். இப்பிடி வெய்ட் பண்ணிறவைக்கு முன்னால நிண்டவையின்ர அலுவல் முடிஞ்சு இவையின்ர முறை வரேக்க, சரியா 'லஞ்ச்' ரைம் வந்திடும். பிறகென்ன, ஒரு மணித்தியாலத்துக்கு அதிகாரிமாரைக் கண்ணிலையும் காணமுடியாது. வந்த சனங்கள் பசியோட நிக்கவேண்டியதுதான். லஞ்ச் முடிச்சு வந்தாலும் உடன அலுவல் தொடங்காது. உண்ட களை தொண்டனுக்குக்கும் இருக்கேக்க, அதிகாரிமாருக்கு இன்னும் கூடவாத்தானே இருக்கும். அதால ஆளாளுக்கு சாப்பாட்டுக்கதையள், போன் கதையள் எல்லாம் ஆய்ஞ்சு ஓஞ்ச பிறகுதான் அவைக்கு சனம் நிக்கிறதே கண்ணுக்குத் தெரியும்.

இந்தப் பயத்தாலதான் கனபேர் உந்த அரசாங்க ஒப்பீஸ் பக்கம் போகவே நடுங்கிறவை.இந்த நடுக்கத்தோட கிட்டடியில டீ.எஸ்.ஒப்பீஸ் ஒண்டுக்கு ஒராள் போயிருக்கிறார்.ஆளின்ர ஐடெண்டிக்கார்ட் துலைஞ்சு போட்டுது. அதால புதிசா ஐடெண்டிக் கார்ட்டுக்கு விதானையாரிட்ட போர்ம் நிரப்பி, சைன் எல்லாம் வாங்கிக் கொண்டு டீ.எஸ். ஒப்பீஸில இருக்கிற ஐ.சி.க்குப் பொறுப்பான பிரிவில குடுத்து. கவுண்டர் சைன் வாங்கினால் கொழும்புக்குப் போய் 'வண்டே சேர்விஸில' ஐ.சி.யை எடுக்கலாம். ஐ.சி. துலைஞ்சு கனகாலம். எண்டாலும் உந்த டீ.எஸ். ஒப்பீஸுக்குப் போற பயத்தில அந்தாள் தள்ளிப்போட்டுக்கொண்டே இருந்தது. எண்டாலும் இப்ப ஆளுக்கு ஒரு அலுவலுக்கு ஐடெண்டிக் கார்ட் அவசரமாத் தேவைப்பட, வேற வழியில்லாமல் புது ஐ.சி.க்குப் பதியிறதுக்கு, கரவெட்டி டீ.எஸ். ஒப்பீஸுக்குப் போயிருக்கிறார். அங்க ஆளுக்குப் பெரும் அதிர்ச்சி. அந்த அதிர்ச்சி என்னெண்டு நாளைக்குப் பட்சி சொல்லும்.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வரலாறு காணாத வெப்ப அலையை இலங்கை எதிர்நோக்கும் அபாயம்!

## பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை!

**கிளிநொச்சி,ஜூன் 22**
**தற்போது உலகெங்கிலும் பரவலாகப் பேசப்பட்டு வரும் 'எல்-நினோ' காலநிலை மாற்றம், நடப்பு 2026ஆம் ஆண்டிலும் மற்றும் வரவிருக்கும் 2027ஆம் ஆண்டிலும் இலங்கைக்குப் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகப் புவியியல்துறைப் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.**

வடக்கு மற்றும் கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், அதன் இணைப்பாளர் ஜான்சன் பிகிராடோ தலைமையில் கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடந்த விசேட விழிப்புணர்வு நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நிலவி வரும் எல்-நினோ தாக்கமானது 1883 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் உருவாகியுள்ள ஒரு மிகப்பெரிய மாற்றமாகும். ஆனால், இந்தமுறை இதன் பாதிப்புத்தன்மை மிகவும் உக்கிரமாக இருப்பதால், இது உலகளவில் உற்றுநோக்கப்படும் பேசுபொருளாக மாறியுள்ளது.

எல்நினோ என்பது வேறு ஒன்றுமல்ல, அது கடற்பகுதியில் ஏற்படுகிற அசாதாரணமான அதிகரித்த வெப்பநிலையாகும். பூமி தொடங்கிய காலம் முதல் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசும் 'வியாபாரக் காற்று', எல்நினோ உருவாகும் போது தனது திசையை மாற்றி, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசத் தொடங்கும்.

நிலத்தில் ஆறுகள் ஓடுவது போலக் கடலுக்குள்ளும் நீரோட்டங்கள் (சுழிகள்) ஓடுகின்றன.

வழமையாக இந்தக் காற்றானது வெப்பத்தைக் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிக் கொண்டு சென்று, கடலின் அடி ஆழத்தில் சேர்க்கப் பார்க்கும். இதனால் குளிர்ந்த நீர் மேற்பரப்புக்கு வந்து காலநிலை சமநிலை பேணப்படும். ஆனால், தற்போதைய எல்-நினோவால் இந்தச் சமநிலை குலைந்து கடற்பரப்பு மிக வேகமாக வெப்பமடைந்து வருகின்றது.

கடந்த சில நாள்களாகப் பசுபிக் சமுத்திரத்தின் வெப்பநிலை மிகத் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. இந்த முறை எல்நினோவின் வெப்பநிலை 3 பாகை செல்சியஸுக்கும் மேல் கூடும் நிலை காணப்படுகின்றது. இதனால் எமக்குக் கடுமையான வெப்பம் அதிகரிக்கப் போகிறது.

சமுத்திரத்தை ஒட்டியுள்ள மன்னார், முல்லைத்தீவு போன்ற கடலோர மாவட்டங்களில் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி சமமாக இருக்கும். ஆனால் கடலற்ற உள்நிலப் பகுதியான வவுனியாவில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுவதற்கு இதுவே காரணம்.

பொதுவாக ஒருமுறை எல்-நினோ தோற்றம் பெற்றால் அது 3 முதல் 7 வருடங்கள் வரை நீடிக்கும் கால வட்டத்தைக் கொண்டது. ஆனால், இம்முறை உருவாகியுள்ள எல்-நினோ முன்னெப்போதும் இல்லாதவாறு மிக நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது- என்றார். (ச-60)



# இணுவில் கந்தசுவாமி கொடியேற்றத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 22
வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலயப் பராபவ வருட வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 25 தினங்கள் காலை, மாலைத் திருவிழாக்களாக ஆலயப் பெருந்திருவிழா இடம்பெறும். ஆலய வப் பெருந்திருவிழாவில் அடுத்த மாதம்01 ஆம் திகதி இரவு 7 மணியளவில் மஞ்சத் திருவிழாவும், அடுத்த மாதம்10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கைலாசவாகனத் திருவிழாவும், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வேட்டைத்திருவிழாவும், அன்றைய தினம் இரவு07.30 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 13 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் தேர்த் திருவிழாவும்,மறுநாள் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை4 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறும். (ச-66)

# வீடு புகுந்து அட்டகாசம் சந்தேகநபர்கள் கைது!

அச்சுவேலி , ஜூன் 22
யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தென்மூலைப் பகுதியில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பெருமளவிலான பொருள்களை அடித்துச் சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தலைமறைவாகியிருந்த மேலும் இரண்டு சந்தேகநபர்கள் அச்சுவேலி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இருவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-23)

# லங்கா உப்பு நிறுவனத்தின் முகாமையாளருக்குப் பிணை

கொழும்பு,ஜூன்.22
ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் கைதுசெய்யப்பட்ட லங்கா உப்பு நிறுவனத்தின் தற்போதைய பொதுமுகாமையாளர் ரத்நாயக்க முதியன் சேலாகே குணரத்னவை பிணையில் செல்ல அனுமதித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. இதன்படி, சந்தேகநபரை தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல உத்தரவிட்ட கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டார். (ச-இ)



# யாத்திரைக்குழுவுக்கு ஏழாம் கட்டமாக உதவி

மட்டக்களப்பு,ஜூன்.22
கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரைக் குழுவினருக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஏழாம் கட்டமாக, ஒருதொகுதி உதவிப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துமா, பிஸ்கட் மற்றும் சவர்க்கார வகைகள், மட்டக்களப்பு வந்தாறுமூலை மகா விஷ்ணு ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரமம் முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவியை வழங்கினார். (ச-66)



# மடு தேவாலயச் சூழலில் யானைகளைக் கட்டுப்படுத்துக!

மன்னார்,ஜூன் 22
மடு தேவாலயச் சூழலில், யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், அவற்றைக் கட்டுப்படுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மடுப் பரிபாலகர் அருட்பணி பி.ஜே.பெப்பி சோசை அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். இதனையடுத்து மடு ஆலயத்தின் ஆடிப் பெருவிழாவை முன்னிட்டு முன்னாயத் தங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரியிடம் மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் மடு பிரதான வீதியிலிருந்து ஆலயம் வரையான வீதிகளின் இருமருங்கிலும் யானைகள் வருவதை அடையாளம் காண, வீதிகளின் இருமருங்கிலும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட வனவளப் பாதுகாப்பு அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-60)

அச்சுவேலியில்

# போதைமாத்திரைகளுடன் 3 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பிரதேசங்களில், சட்டவிரோதமான போதைமாத்திரைகளுடன் நடமாடிய மூன்று இளைஞர்கள் அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளின் போது, அவர்கள் போதை மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்காகவே அச்சுவேலி பிரதேசத்துக்கு வந்திருந்தமை தெரியவந்துள்ளது. அவர்களிடமிருந்து மொத்தமாக 24 போதைமாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது மூவருக்கும் தலா 30,000 ரூபா வீதம் தண்டப்பணம் விதித்து உத்தரவிடப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# எப்போது தேர்தல்...?

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தேர்தல்கள் திணைக் களத்தின் முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய. மாகாணசபைத் தேர்தல்கள் மிக விரைவாக நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. அத்துடன் மாகாணசபைகளில் மக் களின் பிரதிநிதித்துவம் இல்லாமை ஜனநாயக விரோதமானது என்பதைத் தேர்தல் ஆணைக் குழுவும் ஏற்றுக் கொண்டதுடன், 'அரசாங்கம் கூறும் திகதியில் தேர்தலை நடத்தத்தயார்' என்றும் அறி வித்திருக்கின்றது. இவ்வாறான பின்னணியிலேயே, மஹிந்த தேசப்பிரியவும் தேர்தல்களை நடத்து வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி அநுர தலை மையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைத் தவிர, ஏனைய அனைத்துத் தரப்பினரும் மாகாண சபைத் தேர்தல் ஒன்றுக்கு விரைவாகச் செல்வதற்குத் தயாராகவே உள்ளனர். இவ்வாறிருக்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தயக்கம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தவும் செய்கின்றது.

ஜே.வி.பி.யில் இருந்து உதயமான கட்சிதான் தற் போதைய அரசாங்கமான தேசிய மக்கள் சக்தி. இந்தி யாவின் தலையீட்டால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட மாகாணசபைத் தேர்தல் முறைமையை அடியோடு நிராகரித்து அதற்கு எதிராகப் போராட் டங்களை முன்னெடுத்த தரப்பினர்தான் ஜே.வி.பி. யினர். மாகாணசபைகளில் தமிழர்கள் பலம்பெறக் கூடாது என்பதற்காக, வடக்கு - கிழக்கு மாகா ணங்களை நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் பிரித்து இரு துண்டாக்கியவர்களும் அவர்களே. எனவே, உள்ளூராட்சித் தேர்தலைநடத்துவதற்கு அரசாங்கம் காண்பித்த வேகத்தில் பாதியைக்கூட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் காண்பிக்காத மை யின் பின்னணியில் திட்டமிட்ட நடவடிக்கைகள் உள்ளனவா? என்ற சந்தேகம் எழுந்தால் அதில் தவ றில்லை.

மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தியினர் வழங் கியுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. கடற் றொழில் அமைச்சர் சந்திரசேகர், சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க என்று பலரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாகாண சபைத் தேர்தல் கள் தொடர்பில் கருத்துப் பகிர்ந்துள்ளனர். எனினும், அவர்கள் அனைவரும் பொதுமைப்பாடான கருத்தை வெளிப்படுத்தியதாக இல்லை. இவ்வருட இறுதிக்குள் தேர்தல் நடக்கும் என ஒரு தரப்பினரும், எதிர்வரும் வருடத்தின் ஆரம்பத்துக்குள் தேர்தல் நடக்கும் என இன்னொரு தரப்பினரும் மாறிமாறி வாய்மூல வாக்குறுதிகளைத்தான் தந்தவண்ணம் உள்ளனர். இதே நடைமுறைதான் முன்னாள் ஜனா திபதி ரணிலின் அரசாங்கத்திலும் இருந்து, பின்னர் தேர்தலே இல்லையென்றானது. அப்போது ம ாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டுமென ரணில் அரசுக்கு அழுத்தம் கொடுத்த சக்திகளில், தேசிய மக்கள் சக்தியே முன்னின்றது. அப்படி ரணிலுக்கு அழுத்தம் கொடுத்தவர்கள், தாம் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவுடன் எல்லாவற்றையும் மறந்தவர்களாக , முன்னைய ஆட்சியாளர்களின் வழியிலேயே தாமும் பயணிக்கத் தலைப்பட் டுள்ளனர். இவ்வாறு ஜனநாயகத்தை மிதித்து ஆட்சி செய்வோரின் ஆட்சிக் காலம் அதிககாலம் நீடிப்பதில் லை. தேசிய மக்கள் சக்தி இந்த உண்மையைப் புரிந்து கொண்டு ஜனநாயகத்தை தழைத்தோங்க வைக்க, மாகாணசபைத் தேர்தலை சாட்டுகள் ஏதும் சொல் லாமல் உடன் நடத்த முன்வரவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று**

**பொருள்:** ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவை களைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது.




அரச மருத்துவமனைகளுக்கு

# 1.9 பில்லியன் ரூபா செலவில் அதிநவீன சி.ரி. ஸ்கேனர்கள்!

**கொழும்பு, ஜுன் 22**
**இலங்கையின் அரச சுகாதாரத்துறையில் நோயறிதல் சேவையை நவீனமயமாக்கும் நோக்கில் அரச மருத்துவ மனைகளின் சி.ரி. ஸ்கேனர் சேவைகளை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் 1.9 பில்லியன் ரூபா செலவில் அதிநவீன சி.ரி. ஸ்கேனர்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.**

பல தசாப்தங்களாகப் பயன்பாட்டி லிருந்த பழைய தொழில்நுட்பக் கருவிகளுக்குப் பதிலாக, தற்போ தைய மருத்துவத் தேவைகளுக் கேற்ப அதிநவீன 128 ஸ்லைஸ் மற்றும் 64 ஸ்லைஸ் சி.ரி. ஸ்கேனர்கள் அரச மருத்துவம னைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய களுத் துறை போதனா மருத்துவ மனைக்கு 200 மில்லியன் ரூபா வுக்கும் அதிக பெறுமதியான அதி நவீன128 ஸ்லைஸ் சி.டி. ஸ்கேனர் நிறுவப்பட்டுள்ளது. குருணாகல் போதனா மருத்துவமனைக்கு 160 மில்லியன் ரூபா பெறுமதியான சி.டி. ஸ்கேனர் இயந்திரம் பொருத் தப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் சுமார் 640 மில்லியன் ரூபா செலவில் நான்கு அதிநவீன சி.ரி. ஸ்கேனர் கள் கொழும்பு தேசிய மருத்துவ மனை, கண்டி தேசிய மருத்துவ மனை, காலி தேசிய மருத்துவ மனை மற்றும் கொழும்பு தெற்கு (களுபோவில) போதனா மருத்துவ மனை ஆகியவற்றுக்கு வழங்கப் பட்டுள்ளன. (ச)



## சுற்றிவளைப்பு; 798 பேர் கைது

கொழும்பு,ஜுன் 22
முழு நாடுமே ஒன்றாக என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய நேற்றுமுன்தினம் சனிக்கி ழமை மாத்திரம் 798 சந் தேகநபர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர். இந்த நட வடிக்கையின் 540 கிராம் ஐஸ் போதைப்பொருள், 258 கிராம் ஹெரோய்கன், 1கிலோ 341 கிராம் கஞ்சா மற்றும் 1352 போதைமாத் திரைகள் என்பனவும் அதி காரிகளால் கைப்பற்றப்பட் டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. (ச-இ)

## பெண் உயிரிழப்பு கணவன் கைது!

கொழும்பு, ஜுன் 22
பெற்றோல் ஊற்றி தீயிட்டு கொலை செய்யப் பட்டதாகக் கூறப்படும் பெண் ஒருவரின் சடலம் பிபிலை பகுதியில் கண் டெடுக்கப்பட்டுள்ளது.
சம்பவத்தில் உயிரிழந்த வர் 40 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாய் எனபொலிஸார் தெரிவித்தனர். இந்த சம் பவம் தொடர்பில் உயிரி ழந்த பெண்ணின் கண வர் கைது செய்யப்பட்டுள் ளார். சம்பவம் தொடர்பில் பிபிலை பொலிஸார் மேலதிக விசாரணை களில் ஈடுபட்டு வருகின்ற னர். (ச-இ)

## அதிவேகம்; ஒருவர் சாவு

ஹுங்கம பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் உயிரிழந் துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்த னர். விபத்தில் உயிரிழந்தவர் ரன்ன, கொஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 53 வயது டையவர் என அடையாளம் காணப்பட்டுள் ளார். (ச-இ)



# இலங்கை மாலுமிகளை விடுவிக்க ஈரான் இணக்கம்

கொழும்பு, ஜுன் 22
வெளிநாட்டுக் கடற்பரப்பில் வைத்து வர்த்தக கப்பலில் இருந்து ஈரானிய தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டி ருந்த இலங்கை மாலுமிகள் விடு விக்கப்படுவதற்கு ஈரானிய அரசாங் கம் இணக்கம் வெளியிட்டுள்ளது. இலங்கை மற்றும் ஈரானிய அரச அதிகாரிகளுக்கு இடையே பல வாரங்களாக முன்னெடுக்கப்பட்ட இராஜதந்திர பேச்சின் பின்னரே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள் ளது. அதன்படி தடுத்து வைக்கப்பட் டிருந்த மூன்று மாலுமிகளில் இரு வர் இலங்கைக்குத் திருப்பி அனுப் பப்படவுள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை-ஆனி 09
23.06.2026
சுபநேரம் : 10.24 – 11.54
ராகுகாலம் : 02.54 – 04.24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# படகு ஓடுபாதை சீரின்மையால் மீனவர்கள் பெரும் இடர்பாடு

மன்னார், ஜூன் 22

இரண்டு கிலோமீற்றர் தூரமான படகு ஓடுபாதை சீரின்மையால், கீலிக்கரையான்பிட்டி மீனவர்கள் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இதுதொடர்பில் மாந்தை மேற்கு வேட்டையாமுறிப்பு, கீலிக்கரையான்பிட்டி மீனவர் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் களப்புப் பகுதிக்கு நேரடியாகச் சென்று, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்தார்.

குறித்த கீலிக்கரையான்பிட்டி களப்புப் பகுதியில் 9 கிராமங்களைச் சேர்ந்த 60 வரையான மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த படகு ஓடுபாதை சீரின்மையால், நடந்து செல்லவேண்டிய நிலை ஏற்படுவதுடன், படகுகளைத் தள்ளிச் செல்ல வேண்டியுள்ளது என்று மீனவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். மீனவர்களின் குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், படகு ஓடுபாதையை ஆழப்படுத்துவது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார். (க-246)



# சொற்பொழிவும் உதவி வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரதத் தொடர் சொற்பொழிவும் உதவி வழங்கலும் கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சைவப்புலவர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றினார். தொடர்ந்து பொருளாதார நலிவுற்ற குடும்பமொன்றைச் சேர்ந்த யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம்5 இல் கல்விபயிலும் மாணவியொருவருக்கு 53 ஆயிரம் ரூபா பெறுமதியானபுதியதுவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (ச-41-66)

# கலைஞர்கள் விவரம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வலிகாம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையால், பிரதேசத்தைச் சார்ந்த கலைஞர்களின் விவரங்கள் அடங்கிய விவரத்திரட்டு வெளியிடப்படவுள்ளது. எனவே பிரதேச கலைஞர்கள் தங்களது விவரங்களை பிரதேச கலாசாரப் பிரிவில் விண்ணபங்களைப் பெற்று ஒப்படைக்கலாம். அத்துடன்பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களின் விவரங்களையும் அறிந்தவர்கள் வழங்கமுடியும் என்றும் சங்கானைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க)





# மல்லாவி மத்திய கல்லூரியில் நுண்கலைப்பீடம் திறந்துவைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மல்லாவி மத்திய கல்லூரியில் நுண்கலைப்பீடம் கடந்த வியாழக்கிழமை வடமாகாண ஆளுநரால் திறந்துவைக்கப்பட்டது. இந்த நுண்கலைப்பீடம் 8.5 கோடி ரூபா நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணத்தின் 8.5 கோடி ரூபா நிதிப் பங்களிப்புடன், ஜெயரட்ணம் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக, சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய நான்கு துறைகளுக்கும் தனித்தனியான வகுப்பறைகளை உள்ளடக்கியதாக இரண்டு மாடிகளைக்கொண்டுஇந்தநுண்கலையகம் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், அயற்பாடசாலை அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ச-55,27)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழிஉறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும்வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாளாக அமையும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**மகரம்:** ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 90 வீதமான அரச கட்டடங்களுக்கு உள்ளூராட்சிசபை அனுமதியில்லை!


## தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,ஜூன்.22**
**அரசாங்க நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணங்களில் 90 வீதமானவை, உள்ளூராட்சிசபைகளின் கட்டட அனுமதியைப் பெற்றுக்கொள்வதில்லை. அவ்வாறான திணைக்களங்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளுநரின் அறிவுறுத்தலின் பிரகாரம், கடந்த 10 ஆண்டுக்கு உட்பட்ட கட்டடங்களுக்கு வியாபார உரிமம் வழங்கப்படுவதாயின், குடிபுகுச் சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் மட்டுமல்ல அரச நிறுவனங்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் சட்டத்துக்குக் கட்டுப்படவேண்டும். சட்டங்களை உச்சமாக மக்கள் மீது மட்டும் பிரயோகித்து, நாம் சட்டத்தின் ஆட்சி என புளகாங்கிதம் அடையமுடியாது. குறிப்பாக அரச நிறுவனங்களின் கட்டுமானங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் அரச கட்டடங்கள் உள்ளூராட்சியின் அனுமதி பெறாதுள்ளது. குடிபுகுச் சான்றிதழ் இல்லை. பாடசாலைகள் கூட அனுமதி பெறுவதில்லை. ஆகவே இந்தக் கட்டடங்களில் சுகாதாரம், உரிய பாதுகாப்பு, பயன்பாட்டு அங்கீகாரம் இன்றி தான்தோன்றித்தனமாக பல அரச நிறுவனங்கள் செயற்படுகின்றன.

தனியாரின் கட்டடங்கள் தொடர்பாக நீதிமன்றம் சென்று இடித்தழிப்பதற்கான அனுமதியைப் பெறும் உள்ளூராட்சி சபைகள், அரச நிறுவனங்கள் விடயத்தில் மௌனமாக இருக்க முடியாது. எனவே அத்தகைய அரச கட்டுமானங்கள் தொடர்பில் விரைவாகப் பரிசீலித்து அனுமதி வழங்க நாம் தயார். இதற்குத் திணைக்களங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றார். (க)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக ஏற்பாட்டில் கிளாலி கிராம மக்களுக்கான 'பொலித்தீன் பயன்பாட்டினை கட்டுப்படுத்தல்' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கிராம அலுவலர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)



## வடமாகாணப் பளுதூக்கல் போட்டி; பரி.யோவான் கல்லூரிக்குப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணம் புனித பரி. யோவான் கல்லூரி மாணவர்கள் அபார திறமையை வெளிப்படுத்தி பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

அதன்படி ஆண்களுக்கான 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் இ. அபிவருணன் பங்கேற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் வி. கதிரொளி 55 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். க. பிரவிசன் 96 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு வெள்ளிப் பதக்கத்தை வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். (ச)



கிரிம்ஷிகன்
இரண்டாமிடம்



பி.அருளன்பன்
முதலாமிடம்



ஸ்ரனிஸ்ரன்
மூன்றாமிடம்.

## பளுதூக்கல் போட்டியில் சென்.பற்றிக்ஸ் சாதனை

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 20 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் அபார திறமையை வெளிப்படுத்தி தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

அதன்படி 55 கிலோகிராம் நிறைப்பிரிவில் போட்டியிட்ட ஆர். அருளன்பன் முதலாம் இடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

109 கிலோகிராம் நிறைப்பிரிவில் போட்டியிட்ட ஜெ. கிரிம்ஷிகன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைத் தனதாக்கினார்.

89 கிலோகிராம் நிறைப்பிரிவில் எஸ். ஸ்ரனிஸ்ரன், மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டு வெண்கலப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார். (ச)





வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீலட்சுமி சமேத நரசிங்கர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் இருந்து காவடிகள், கரகாட்டம், பொம்மலாட்டம், குதிரை ஆட்டம், மயிலாட்டம் என்பன ஊர்வலமாக வவுனியா நகரின் ஊடாகச் சென்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HIKVISION GOC Horion Riotouch

NALIN Information Technologies Pvt Ltd.

ஒரு சிறந்த SMART PANEL இனை நிறுவி
நவீன மயப்படுத்தப்பட்ட முன்னேற்றப்பாதையில்
எம்முடன் இன்றே இணையுங்கள்

# INTERACTIVE FLAT PANEL DISPLAY

SPECIAL PRICE
RS. 360000/=
BEST VALUE

EXCLUSIVE OFFER

4K




Smart Presentation | Better Learning
Smarter Meeting.

Terms & Conditions Apply*

IDEAL FOR

**CLASS ROOMS** Engage students with interactive learning

**MEETINGS** Collaborate, present and impress

**HOMES** Smart entertainment and productivity

3 YEAR WARRANTY

FREE INSTALLATION | FREE DELIVERY

| THANU | THUSHY | VITHU | HANIFER | GEORGE |
|---|---|---|---|---|
| 076 359 8614 | 076 359 4366 | 076 359 4365 | 076 359 7610 | 076 359 4359 |

NALIN INFORMATION TECHNOLOGIES - 195/2, PARAMESWARA JUNCTION, PALALY ROAD, JAFFNA




## பிரதமகுருக்களின் ஆசியுரை



உலகத்தின் தோற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமாய் விளங்குவது சக்தி. எறும்பு முதல் யானை ஈறான உயிரினங்களின் இயக்கத்துக்கு காரணம் சக்தி. பூமி முதலான கிரகங்களின் இயக்கதத்துக்கு ஈர்ப்பு சக்தி அவசியம்.

இப்படி எவ்வாறு நோக்கிலும் சகலவற்றுக்கும் காரணமாகி றாள் சக்தி. அந்த வகையில் அன்பர்களாகிய அடியவர்களின் துயர்துடைத்து பேரின்பத்தை அளித்து வரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹோற்சவ திருவிழா நடைபெற்று இன்று திருமஞ்சத்திலே உலாவர இருக்கிறாள் அம்பாளை தரிசிக்கவரும் அனை வருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் என்றென்றும் கிடைக்க வேண்டும். என ஆசிகள் கூறுகின்றேன்.

**தேவஸ்தான மஹோற்சவ குரு**
**சிவஸ்ரீ சி.கிருஸ்ணமூர்த்தி குருக்கள்** (அச்செழு)

**கடந்த 2024 ஆம் ஆண்டு அமையப் பெற்ற இத் திருமஞ்சத்தில் அம்பாள் இரவு 7.00 மணியளவில் வீதி உலாவருவாள்**

## சிறப்புற வாழ்த்துவோர்

**புலம்பெயர் வாழ்**
**இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை**

## ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழப்பாண நகரின் கிழக்குத் திசையில் அரியாலைக் கிராமத்தின் மேற்கு திசையில் வீற்றிருந்து அருள் சுரக்கும் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய நல்லூரின் தென்புலத்தில் அன்று தொட்டு இன்றுவரை அருள்மழை பொழிந்து எம்மைத் காப்பாற்றி வருகின்றாள் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்.

இந்த ஆலயத்தின் வரலாறு பல நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். ஆரம்பத்தில் தர்மகர்த்தா சபையினர் ஆலயத்தை நிர்வகித்து வந்தனர் தற்போது பரிபாலான சபையினர் நிர்வகித்து வருகின்றனர். மூர்த்தி. தலம். தீர்த்தம். விருட்சம் ஆகிய நான்கும் அமையப் பெற்ற எம் அம்பாளைத் தரிசிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் வருகை தருகின்றனர். ஆலயப் புனருத்தாரணம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு அடியவர்களின் உதவியுடனும் புலம்பெயர் வாழ் தேசத்து உறவுகளின் உதவியுடனும் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. புதுப்பொலிவுடன் சிறப்புற்று விளங்கும் இவ்வாலயத்தில் தற்போது 10 திருவிழாக்களைக் கொண்ட மஹோற்சவ திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். கைலாசவாகனம். சப்பறம். தேர் என்பனவற்றுடன் புதிதாக அமையப்பெற்ற திருமஞ்சத்திலும் அம்பாள் உலாவந்து அடியவர்களுக்கு அருள்பாலிக் கின்றாள்.

## அம்பாளின் அதிசயம்

1912 ம் ஆண்டு யாழ்குடா நாடே அதிசயிக்கும் வகையில் ஆச்சரிய மான சம்பவம் நடைபெற்றது. அன்று அந்நியரின் ஆட்சி நடைபெற்ற காலம் யாழ் குடாநாடு என்றுமே காணாத சோகச் சம்பவம் இடம்பெற்றது. யாழ் குடா நாட்டை வைசூரி எனும் அம்மை நோய் தாக்கியது. அரசினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அம்மை நோய் கோரத்தாண்டவம் ஆடியது. கிராமம் கிராமமாக மக்கள் நோயில் மடிந்தனர் பல ஆயிரக் கணக்கானவர் நோயில் மடிந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. நோய்தொற்று ஏற்பட்டவர்களை ஊர்காவற்றுறை கடற் கோட்டையில் தனிமைப்படுத்தி மேலும் நோய் பரவாமல் ஆட்சியாளர்கள் செய்தனர். கிராமம் கிராமமாக இந்நோயினால் மாண்டவர்கள் தவிர நோயில் இருந்து குணமாகியவர்கள் உடற் சிதைவுகளுடன் காலத்தைக் கழித்தனர். ஆனால் யாழ் குடாநாடே அதிசயிக்கும் வகையில் அரியாலை மேற்கு கிராமத்தில் மட்டும் ஒருவருக்கு கூட இந்நோய் ஏற்படவில்லை. இப் பேரழிவிலிருந்து எம் மக்களைக் காத்தவள் எமது [illegible]

## இஷ்ட சித்திகளை பெறுவீர்களாக



ஈழமணித்திருநாட்டின் ஈடில்லா சிரமே என விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் வளர்ந்த நாவலர் பெருமான் தோன்றிய நல்லூரை அடுத்தாற் போல் உள்ள அரியாலையூரில் வெட்டுக் குளத்தில் வீற்றிருந்து அருள்சக்தியாக விளங்கும்.

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மகோற்சவ திருவிழா நடைபெற்று வருகிறது. அந்தவகையில் இன்றைய தினம் திருமஞ்சத்தில் அம்பாள் உலாவந்து அடியவர் களுக்கு அருள் பாலிக்கிறாள். இன்று நடைபெறும் திருமஞ்ச திருவிழாவில் அம்பாளை தரிசிக்க வரும் அம்பாளின் அனைத்து அடியவர்களும் அருளாசி பெற்றிட ஆசிகள் கூறுகின்றேன்.

**ஆலய அர்ச்சகர்**
**பிரம்ம ஸ்ரீ சண்முக மாதுள சர்மா**

**திருமஞ்ச நிகழ்வைத் தொடர்ந்து இரவு 9.00 மணிக்கு பின்னர் ஆலயத்தில் நடனம் மற்றும் பட்டிமன்றம் என்பன நடைபெறும்**

**திருவிழா உபயகாரர்கள் மஞ்சத்திருவிழா உபயகாரர்கள்**
புலம்பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிசபை சார்பில்
திரு. செல்வராசா - பரமு
திரு. குமணன் களகரத்தினம்
திரு. விஜயகுமார் பண்டிதர்
திரு. சதீஷ் மதுரநாயகம்
திரு. தேவரூபன் கந்தையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2025 சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## வவுனியா தமிழ் ம.ம. வி. 15 மாணவர்கள் 9ஏ சித்தி

வவுனியா, ஜூன் 22

அண்மையில் வெளியான 2025 (2026) ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் 15 மாணவர்கள் 9ஏ சித்தியினைப் பெற்றுள்ளானர். அத்துடன் 8ஏ சித்திகளை 17 மாணவர்களும், 7ஏ சித்திகளை 17 மாணவர்களும், 6ஏ சித்திகளை 18 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

பாடசாலையில் பரீட்சைக்கு 247 மாணவர்கள் தோற்றிய நிலையில் உயர்கல்விக்கு 209 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். (ச-110)

## வவு. இறம்பைக்குளம் ம.வி. யில் 26 மாணவிகள் 9ஏ சித்தி!

வவுனியா, ஜூன் 22

2025ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகாவித்தியாலயத்தில் 26 மாணவிகள், 9 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் 17 மாணவிகள் 8 பாடங்களிலும் 'ஏ' சித்திகளையும், 17 மாணவிகள் ஏழு பாடங்களிலும் 'ஏ' சித்திகளையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-110)

# திருத்தம் முடிந்து களமிறங்கிய 'வடதாரகை', 'நெடுந்தாரகை'

யாழ்ப்பாணம், ஜூன் 22

**நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான கடல்வழிப் போக்குவரத்தில் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் 'வடதாரகை' மற்றும் 'நெடுந்தாரகை' ஆகிய இரு பெரும் பயணிகள் படகுகளும் திருத்த வேலைகள் முழுமையாக நிறைவடைந்து மீண்டும் பாதுகாப்பான முறையில் மக்கள் பயன்பாட்டுக்காக விடப்பட்டுள்ளன.**

அண்மையில் பழுதுபார்ப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக அவை நிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது அவற்றின் அனைத்துத் திருத்த வேலைகளும் முழுமையாக நிறைவடைந்து, மீண்டும் பாதுகாப்பான முறையில் மக்கள் பயன்பாட்டுக்காகக் களமிறக்கப்பட்டுள்ளன.

இந்த இரு படகுகளும் முழுத் திறனுடன் மீண்டும் சேவையில் இணைந்துள்ளதைத் தொடர்ந்து இன்று திங்கட்கிழமை முதல் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளில் நெடுந்தீவுக்கான அரச கடற்போக்குவரத்துச் சேவைகள் கணிசமாக அதிகரிக்கப்படவுள்ளன.

அதன்படி நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 6:15 மணி மற்றும் காலை 6:45 மணி ஆகிய நேரங்களில் இரண்டு படகுகள் புறப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கி காலை 7:30 மணி மற்றும் காலை 8:30 மணி ஆகிய நேரங்களில் படகுகள் நெடுந்தீவை நோக்கிச் செல்லும்.

மாலை நேரப் பயணங்களின் போது பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவைகளைக் கருத்திற்கொண்டு, தேவைப்படின் மேலதிக அரச படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ச)

## கல்முனை தமிழர் படுகொலை 36ஆம் ஆண்டு நினைவேந்தல்

அம்பாறை, ஜூன் 22


அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி அரங்கேற்றப்பட்ட தமிழர்கள் மீதான கொடூரப் படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றது. கல்முனை அம்மன் கோவில் வீதிச் சந்தியில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கல்முனைத் தொகுதித் தலைவரும் சட்டத்தரணியுமான நிதான்சன் தலைமை தாங்கினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்காகப் பொதுச்சுடர் மற்றும் ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. 1990 ஜூனில் கல்முனை நகர் மீது இராணுவத்தினர் நடத்திய தொடர் எறிகணைத் தாக்குதல்களையடுத்து விடுதலைப்புலிகள் நகரை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, ஜூன் 20 அன்று பொதுமக்கள் மீதான தாக்குதல் ஆரம்பித்தது. கல்முனை வாடி வீட்டுச் சந்தியில் நிலைகொண்ட இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்கள் இணைந்து தமிழ்ப் பொதுமக்களைக் கடத்தி பின்னர் அவர்கள் அனைவரையும் அங்குள்ள கடைகளுக்குப் பின்னால் வைத்து எரியூட்டப்பட்டு படுகொலை செய்தனர். அத்துடன் 1990 ஜூன் மாதம் 27 இல் 75 பொதுமக்கள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டு எரியூட்டப்பட்டனர். மேலும் 27 பேரின் தலையற்ற உடல்கள் கல்முனைக் கடற்கரையில் கரையொதுங்கியதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்தது. மேலும் மொத்தமாக 7,000 பேர் வரை 1990 ஜூன் மாதத்தில் கொல்லப்பட்டனர் என அவ்வமைப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



கோப்பாய் வக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும். (க-17)

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோவில் பெருந் திருவிழாவின் சப்பறத் திருவிழா பக்திபூர்வமாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-9)





பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. பார்வத வர்த்தனி சமேதராக உள்வீதி வலம் வந்த பசுபதீச்சரப் பெருமான் சித்திரத் தேரிலேறி வெளி வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணப் பளுதூக்கல் போட்டியில் மகாஜனக் கல்லூரிக்கு 11 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

வடமாகாண பாடசாலைகளுக்கான பளுதூக்கல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவர்கள் 11 பதக்கங்களைப் பெற்றுச் சம்பியன் ஆகியுள்ளனர். 20 வயது ஆண்கள் பிரிவில் வி. சாதுரியன்(முதலாமிடம்), ஜெ. கோமகன்(முதலாமிடம்), ரி. கவியழகன் (இரண்டாமிடம்), ஜெ. ஜெனுசின்(முதலாமிடம்) ஆகியோரும், 20 வயது பெண்கள் பிரிவில் ஆர். ஸ்ரீவித்தகியும் (முதலாமிடம்) பதக்கங்களை வென்றுள்ளார். அத்துடன் 17 வயது பெண்கள் பிரிவில் ரி.சர்மியா(முதலாமிடம்), எஸ். ஷானுஜா( முதலாமிடம்),ரி. ஆரதி (இரண்டாமிடம்), 17 வயது ஆண்கள் பிரிவில்எஸ். டிஷான் (முதலாமிடம்), ரி. லபிஷாந்த் (இரண்டாமிடம்), எஸ். குகதர்ஷன் (மூன்றாமிடம்) ஆகியோர் பதக்கங்களை வென்றுள்ளனர். (க)

# போக்குவரத்து விதிமீறல்கள் மோ.சைக்கிள்கள் பறிமுதல்

அம்பாறை,ஜூன் 22

வீதிப் பொது போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 33க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அம்பாறை சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்ட நகரப்பகுதி உட்பட புறநகர்ப் பகுதிகளில் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ச-இ)


## மனம் கலங்கி வாடுகின்றோம்

மண்ணில் 25.07.1976



விண்ணில் 19.06.2026

எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆணி வேராக இருந்து அரும் பெரும் பணியாற்றிய எமது நிறுவனத்தின் சிரேஷ்ட படவரைஞரும் முன்னாள் எமது சக நிறுவனமான உருத்திரா பொறியியல் கட்டிடக்கலை மதி உரை நிறுவனத்தின் பணிப்பாளர்களின் ஒருவருமான

**அமரர் மரியதாஸ் அன்ரன் மக்ஸி**

அவர்களது இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர் சபையும், ஊழியர்களும்,
**ஞலின்ஸ் நிறுவனம்.**
நல்லூர்.

(cs 61723 (N.1)



## யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நன்கொடை வழங்கல்



முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல மற்றும் சேர். கந்தையா வைத்தியநாதன் முன்னிலையில் பாடசாலை அறிக்கை சமர்ப்பிக்கும் முருகேசு சுவாமிநாதர்



வலிகாமம் கிழக்கு தென்பகுதி கோப்பாய் விவாக, பிறப்பு, இறப்பு முன்னாள் பதிவாளர் அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம்

1872ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் அவர்களால் கோப்பாய் மத்தியில் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் ஆண்கள் பாடசாலை அமைக்கப்பட்டது. பெண்களின் கல்வியின் அவசியத்தை உணர்ந்த அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்கள். நாவலர் பாடசாலையின் எல்லையில் இருந்த தனது 'வெல்லம்பிட்டிக்' காணியின் ஒரு பகுதியில் கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலை என்னும் பெண்கள் பாடசாலையை 1910ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று சேர்.பொன். இராமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்பித்தார். 1913ஆம் ஆண்டு அரசாங்கத்தின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகவும் அதனைப் பதிவுசெய்ததுடன். 26.11.1913 அன்று தனது 1 ½ பரப்புக் காணியையும் அன்பளிப்பாக வழங்கினார். ஆறுமுக நாவலர் அவர்களது மறைவிற்குப் பின்னர். நாவலர் தரும பரிபாலக சபையின் தலைவர் த.கைலாசபிள்ளை அவர்களின் வேண்டுகோளினை ஏற்று. இரண்டு பாடசாலைகளையும் இணைத்து கோப்பாய் நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயரில். அரசின் அனுமதியுடன். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் நடாத்தி. அதன் முகாமையாளராகவும் கடமையாற்றியிருந்தார். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக. 1927ஆம் ஆண்டு பன்ன வேலைக் கைத்தொழில் பயிற்சியினை அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்கள் இப்பாடசாலையில் ஆரம்பித்ததுடன் அதனை குடிசைக் கைத்தொழில் இலாகாவிலும் பதிவு செய்திருந்தார்.

அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்களின் மகனான அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம் அவர்களுக்கு பாடசாலைக்கு மேற்குப் புறமாக 5 பரப்பு காணியும். கிணறு மற்றும் பயிர்களும் இருந்தன. 1986ஆண்டில் இக்காணியானது பலாத்காரமான முறையில் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அப்போதைய பாடசாலை நிர்வாகம் இக்காணியில் தமது பாடசாலைக்கான விரிவாக்கலினை எந்த உரித்துமின்றி மேற்கொண்டு வந்தது.

2013ம் ஆண்டு. தம்மிடமிருந்து அடாத்தாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் உரிமை கோரி அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம் குடும்பத்தவர்களால் கௌரவ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 25.11.2025ந் திகதி கௌரவ மன்றில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகத்தினர். மேற்படி காணியானது அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியத்திற்கு உரியது என்பதை ஏற்றுக் கொண்டனர். அதன் அடிப்படையில். கல்வித் தேவைக்காகவும். சமூக விருத்திக்காகவும். மேற்படி காணியை அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியத்தின் குடும்பத்தினர் பாடசாலைக்கு அன்பளிப்பாக இன்றைய தினம் வைபவ ரீதியாகக் கையளிக்கின்றனர்.

(cs 61720) N-1

**சுவாமிநாதர் சுப்பிரமணியம் குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 • 04 • 1937



மறைவு
19 • 06 • 2026

## வேலாயுதம் பார்வதி

புங்குடுதீவு 4ம் வட்டாரம் தம்பர்கடைச்சந்தியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் பார்வதி கடந்த 19.06.2026 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சோகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் துணைவியாரும், தேசிங்குராஜா (ஜேர்மனி), தவமணிதேவி (தேவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகலிங்கம் (வர்த்தகர்), வானதி (ஜேர்மனி - நடன ஆசிரியர்) ஆகியோரின் ஆசை மாமியும், மதிவண்ணன், காந்தரூபி, மதிஸ்வரன் சிவதர்சினி, சதானந்தன் மதிவதனி, சுரேஸ்குமார் அருந்ததி, மதிநேசன் லக்சி, கிஷேத்தனன் பிரவினா, சியாம் தர்சினி, சுதர்சன், தமிழினி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, சரஸ்வதி மற்றும் கனகமணி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சதாசிவம், நடராசா, முத்துக்குமார், வைத்திலிங்கம், நடராசா ஆகியோரின் மைத்துனியும், பிரதிகா, சாருக்ஷன், சாருக்ஷா, திஷாந், கஸ்விகா, தர்ஷன், தனிஷ்கா, ஆருஷ், திஷானி, தர்ஷிதன், மதுசிகன், லியா, தர்னேஷ், லக்கிஷா, சத்தியா, சக்தி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**315/2, பலாலி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 7040 264, 077 6461 286**

(C- 617250)N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பருவநிலை மாற்றங்களின் விளைவால் ஆபத்தில் 1.8 பில்லியன் குழந்தைகள்

ஐ.நா. எச்சரிக்கை!

**வொஷிங்டன்,ஜூன் 22**
**பருவநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளால் உலகெங்கிலும் சுமார் 1.8 பில்லியன் குழந்தைகள் வறட்சியினாலும், 1.2 பில்லியன் குழந்தைகள் கடுமையான வெப்ப அலையினாலும் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளதாக யுனிசெப் வெளியிட்டுள்ள புதிய அறிக்கை எச்சரித்துள்ளது.**

662 மில்லியன் குழந்தைகள் வெப்பமண்டல புயல்களாலும், 337 மில்லியன் குழந்தைகள் ஆற்று வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டுள்ளனர்.
ஆபிரிக்காவில் மட்டும் 1 பில்லியன் குழந்தைகள் மலேரியா ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.
கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும், பருவநிலை விபரீதங்களால் 85 நாடுகளில் 242 மில்லியன் குழந்தைகளின் கல்வி தடைப்பட்டுள்ளது.
அத்துடன் உலகளாவிய வானிலையை மாற்றி அமைக்கும் 'சுப்பர் எல்-நினோ' தாக்கம் வரவிருக்கும் மாதங்களில் உணவு உற்பத்தியை அச்சுறுத்தக்கூடும்.
இருப்பினும், கடந்த ஆண்டுகளில் உலகளவில் அரிசி மற்றும் இதர தானியங்கள் சாதனை அளவில் அறுவடை செய்யப்பட்டு சேமிப்பில் உள்ளதால், உணவுப் பற்றாக் குறை ஆபத்து சற்றுக் குறைந்துள்ளது என்றும் ஐ. நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இஸ்ரேலின் தொடர் தாக்குதல் லெபனானில் 4,000 பேர் பலி!

கொழும்பு,ஜூன் 22
கடந்த மார்ச் முதல் லெபனான் மீதான இஸ்ரேலிய தாக்குதலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4,057 ஆக உயர்ந்துள்ளதுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 12,121 ஆக அதிகரித்துள்ளது என லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தெற்கு மற்றும் கிழக்கு லெபனான் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய கடுமையான தாக்குதலில் மட்டும் 83 பேர் உயிரிழந்துள்ளனர், 141 பேர் காயமடைந்துள்ளனர். வெள்ளிக்கிழமை மட்டும் 47 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 97 பேர் காயமடைந்தனர். குறிப்பாக லெபனான் உட்பட பல முனைகளில் போரை முடிவுக்குக் கொண்டுவர ஈரான் மற்றும் அமெரிக்கா இணைந்து பல நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வேளையில் இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் கடுமையாகி உள்ளது.
லெபனான்மீதான இஸ்ரேலின் இந்தத் தாக்குதலால் ஈரான் மீண்டும் ஹோர்மூஸ் நீரிணையை மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# இஸ்ரேல் தொடர் தாக்குதல்; ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் மூடியது ஈரான்!

தெஹ்ரான்,ஜூன் 22
தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை கண்டித்து ஈரான் மீண்டும் ஹோர்மூஸ் ஜலசந்தியை மூடுவதாக அறிவித்துள்ளது.
அமெரிக்கா - ஈரான் இடையே ஜூன் 19 ஆம் திகதி அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் ஒரு பகுதியாக உலக எண்ணெய், எரிவாயு ஏற்றுமதிக்கு முக்கியமான கடல்வழிப்பாதையான ஹோர்மூஸ் ஜலசந்தியை ஈரான் திறந்தது.
இந்தநிலையில் தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 32க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
இந்த நிலையில் ஈரானின் இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,
"தற்போதைய போர்ச்சூழலை ஆய்வு செய்த பிறகு, ஹோர்மூஸ் ஜலசந்தியை மீண்டும் முழுமையாக மூட முடிவு செய்துள்ளோம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள விதிகளை எதிர்த் தரப்பு மீறிவிட்டது. அவர்களின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தால், இதைவிடக் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை ஈரான் எடுக்கும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ஹிஜாப் அணியாத பாடகிக்கு 74 சவுக்கடித் தண்டனை!

தெஹ்ரான்.ஜூன் 22
இசை நிகழ்ச்சியொன்றில் ஹிஜாப் அணியாமல் பாடல் பாடிய பாடகிக்கு ஈரான் அரசு 74 சவுக்கடிகள் தண்டனையுடன் எந்தவொரு கலைசார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், வெளிநாடு செல்வதற்கும் இரண்டு ஆண்டுகள் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.
ஈரானில் கடந்த 1979ஆம் அண்டு ஏற்பட்ட புரட்சிக்கு பிறகு, பெண்கள் கடுமையான ஆடை விதிமுறைகளை பின்பற்றவும், பொது இடங்களில் தனியாக பாடுவதற்கும் தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டது.
இந்த நிலையில் கடந்த 2024 டிசெம்பரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஈரான் தேசபக்தி பாடலை, இசைக்கலைஞர்களுடன் இணைந்து அந்நாட்டு பாடகி பரஸ்தூ அஹ்மதி, நேரலையில் பாடி யூடியூப் கனலில் ஒளிபரப்பினார்.
அந்த காணொளி காட்சி வெளியான பிறகு, பாடகி அஹ்மதி மீது ஈரானிய அதிகாரிகள் சட்ட முறைப்படி தொடர்ந்த வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஹிட்லர் பெயரில் பீட்சா ஓடர் ரஷ்ய இளைஞருக்கு சிறை!

தெஹ்ரான்.ஜூன் 22
தனது பெயருக்குப் பதிலாக ஜேர்மானிய சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் பெயரை பயன்படுத்தி ஒன்லைனில் பீட்சா ஆர்டர் செய்த ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரை சேர்ந்த 17 வயது மாணவர் ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
ஹிட்லரின் நாஜிப் படைகளை வீழ்த்திய வரலாறு ரஷ்யாவுக்கு உண்டு. ரஷ்ய சட்டப்படி, நாஜிசத்தின் சின்னங்களையோ, பெயர்களையோ பொதுவெளியில் காட்சிப்படுத்துவதும் பரப்புவதும் மிகக் கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால் மாணவரின் இந்த விளையாட்டான செயலால் அவர் கைது செய்யப்பட்டு அவருக்கு நீதிமன்றம் 5 நாள்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. இந்ததேசவிரோதசெயலின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, அந்த மாணவனை அவர் படித்து வரும் கல்லூரியில் இருந்தும் நிரந்தரமாக நீக்க நிர்வாகம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# ஹோர்மூஸில் கட்டணம் ஈரான் வசூலிக்க முடியாது

ட்ரம்ப் திட்டவட்டம்



**தெஹ்ரான்,ஜூன் 22**
**ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு ஈரான் சுங்கக் கட்டணம் வசூலிக்க அனுமதிக்காது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**
**ட்ரூத் சோஷியல் தளத்தில் அவர் பதிவிட்ட பதிவில் மேலும் கூறியுள்ளதாவது-**
**அமெரிக்கா வேறுவிதமாக முடிவு செய்யாத வரையில், 60 நாள் இடைக்காலப் போர்நிறுத்தக் காலத்தின்போதோ அல்லது அதற்குப் பின்னரோ, இந்த முக்கியத்துவம் வாய்ந்த நீர்வழிப்பாதை வழியாகச் செல்வதற்கு எந்தச் சுங்கக் கட்டணமும் வசூலிக்கப்படாது. எதிர்காலத்தில் அமெரிக்கா விதிக்கும் எந்தவொரு கட்டணமும், இந்தப் பகுதியைப் பாதுகாப்பதில் வொஷிங்டன் ஆற்றிய பங்கைச் சார்ந்தே இருக்கும் - என்றுள்ளார். (ச-இ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆற்றில் நீராடியவர் நீரில் மூழ்கிப் பலி!

காலி, ஜுன். 22

காலி, கொக்கல ஆற்றுப் பகுதியில் குளிக்கச் சென்ற இரண்டு நபர்கள் நீரில் மூழ்கியதில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ள மற்றைய நபரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-இ)



## 1[st] ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17.12.2006 — உதிர்வு 02.07.2025

### அமரர் சுரேஸ்குமார் திஷாலன்

ஒரு ஆண்டு ஆனதடி மகனே,
உன் சிரிப்பு இன்னும் வீட்டில் ஒலிக்கிறது...
காலம் நகர்ந்தாலும்,
உன் நினைவுகள் மட்டும் நெஞ்சை விட்டு நகரவில்லை.

காலை ஒளியில் உன் முகம் தெரிகிறது,
மாலை காற்றில் உன் குரல் கேட்கிறது...
எங்கள் வாழ்வில் நீ இருந்த இடம்,
இன்றும் வெறுமையாய் நிற்கிறது.

கண்ணீரால் நாட்கள் கடக்கின்றன,
ஆனால் அன்பால் நீ எங்களுள் வாழ்கிறாய்...
பிறந்த நாளை போலவே,
பிரிந்த நாளும் எங்கள் இதயத்தில் அழியாதது.

தூங்கிவிட்டாய் என்றே நினைக்கிறோம் மகனே,
ஏனெனில் "இல்லை" என்ற சொல்லை
இந்த மனம் இன்னும் ஏற்கவில்லை...

உன் ஆன்மா சாந்தியடைய,
எங்கள் பிரார்த்தனைகள் என்றும் தொடரும்.
நினைவில் நீ மட்டும் அல்ல,
நெஞ்சில் என்றும் நீயே மகனே...

என்றும் நீங்கா நினைவுகளுடன்...
ஜெயகுமார்
(சித்தப்பா குடும்பம்)

## ஓராண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் (22.06.2026)



மலர்வு 17.12.2006 — உதிர்வு 02.07.2025

(உன் இதயம் இந்த உலகில் இல்லாவிட்டாலும்
உன் நினைவில் தான் எங்கள் இதயமே துடிக்கின்றது)

கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குலவிளக்கு

### அமரர் சுரேஸ்குமார் திஷாலன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஓராண்டு நினைவு நாள் இன்று (22.06.2026) திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைத்து நல் உள்ளங்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை, மடத்தடி,
சுன்னாகம்.
0777 073 069

குடும்பத்தினர்.

(CS 31227)A

## மரண அறிவித்தல்



மலர்வு 12 . 01 . 1958 — உதிர்வு 21 . 06 . 2026

### நடேஸ்வரன் கிருபாலினி

சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேஸ்வரன் கிருபாலினி அவர்கள் நேற்று (21.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நடேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், சாளினியின் பாசமிகு தாயாரும், அகிலன் அவர்களின் அன்பு மாமியும், மகிஷா, அகேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர் பாலச்சந்திரன் மற்றும் புலேந்திரன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும், விமலேஸ்வரி, அனுஷா, கனகசந்திரிகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2026) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சோலையம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32034)A

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1946 — மறைவு 21 . 06 . 2026

### நாகலிங்கம் அப்புலிங்கம்

(ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்)

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதிய்ய வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அப்புலிங்கம் (ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்) அவர்கள் 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பிகை அப்புலிங்கம் அவர்களின் பாசமிகு கணவரும், கீதா (இலங்கை), கீதராஜ் (லண்டன்), கீதாகரன் (கனடா), கீதரமணன் (அமெரிக்கா), கீதசகிலன் (இலங்கை) ஆகியோரின் அன்புத்தந்தையும், வசந்தகுமார், கலா, அகல்யா, வித்யா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், கௌரீஸ்வரி மற்றும் திலகவதி, இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மனோன்மணி, தெய்வேந்திரம், மகாலிங்கம் மற்றும் கந்தசாமி, இரத்தினசிங்கம், பரமாநந்தன், சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நாகேஸ்வரி, ராகினி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும், கபிலயன், வேணுகன், பாணுகன், ஹரிஸ், பிரவீனா, பிருத்திகா, சயாணுகா, மகதீஸ், பவனேஸ், கவினாஸ், சிவாங்கி ஆகியோரின் அன்புத்தாத்தாவும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் (75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) 21.06.2026 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 24.06.2026 புதன்கிழமை காலை 10 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனை தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெறும், பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு,
வசந்தகுமார் (மருமகன்) - +94 76 0978003
கீதசகிலன் (மகன்) - +94 77 711 1410
கீதாகரன் (மகன்) - +1 416 879 4190
கீதராஜ் (மகன்) - +44 7455 455460

தகவல்:
லிங்கம் கிறீம் ஹவுஸ்
குடும்பத்தினர்.

(CS 32037)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயானந்தமூர்த்தி....

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா ஜெயானந்தமூர்த்தி (வயது-61) உடல்நலக்குறைவால் நேற்றுப் பிற்பகல் காலமானார். சுகவீனமுற்ற நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரண்டு வாரங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

1965ஆம் ஆண்டு பிறந்த இவர், ஆரம்பத்தில் ஆசிரியராகவும், வீரகேசரி மற்றும் தமிழ்நெட் ஆகியவற்றில் ஊடகவியலாளராகவும் பணியாற்றியவர். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 44,457 விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

அரசியல் நெருக்கடிகள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக 2008 இல் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்த அவர், 'அழிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள்' என்ற நூலை வெளியிட்டதுடன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திலும் குறுகிய காலம் அங்கம் வகித்தார்.

பின்னர் 2020 ஆம் ஆண்டு நாடு திரும்பிய ஜெயானந்தமூர்த்தி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளில் இயங்கினார். இறுதியாக, கடந்த 2024 மே மாதம் ஐக்கிய மக்கள் சக்தியின் கல்குடாத் தொகுதி இணைப்பாளராக நியமிக்கப்பட்டு அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்தார். (அ-எ-இ)

## டொலர்...

கண்டறியப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்விதப் பொருள்களையும் இறக்குமதி செய்யாமல், போலி ஆவணங்கள் மூலம் டொலரை வெளியேற்றிய 105 உள்ளூர் நிறுவனங்கள் விசாரணைகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த சட்ட வெற்றிடங்களை நிரப்ப, நிதி அமைச்சரால் 2026 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, இறக்குமதியாளர் ஒருவர் இலங்கை சுங்கத்தில் பதிவு செய்யப்படாவிட்டால், டொலர் முற்பணங்களை வழங்க வர்த்தக வங்கிகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வெளிநாட்டு நாணயப் பரிமாற்றத்துக்கும் தனித்துவமான அடையாள எண் உருவாக்கப்பட்டு, சுங்கத் திணைக்கள கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், ஏற்றுமதி வருமானத்தை நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பான புதிய விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மோசடிகளுடன் தொடர்புடைய போலி நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு உதவிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளைக் கண்டறிய கூட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக்கட்டுப்பாடுகள் காரணமாக ரூபாவின் மதிப்பு ஸ்திரமடைந்துள்ள போதிலும், முறையான வர்த்தகர்கள் சுங்கப் பதிவுகளின் போது சில தற்காலிகத் தாமதங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-எ-இ)



# முதுகெலும்பு இருப்பின் தேர்தலை நடத்துங்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 22

மக்கள் முன் செல்வதற்கு இந்த அரசாங்கம் அஞ்சுகின்றது. அதனால்தான் மாகாணசபைத் தேர்தல் இழுத்தடிக்கப்படுகின்றது. முதுகெலும்பிருந்தால் தேர்தலை நடத்துமாறு சவால் விடுக்கின்றோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சகல ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளையும் நாடாளுமன்றத்துக்குள்ளும், அதற்கு வெளியேயும் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். மக்கள் பெற்றுக்கொடுத்த அறுதிப் பொரும்பான்மையான அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த அரசாங்கம் குறிப்பாக நாடாளுமன்றத்தின் பல்வேறு குழுக்கள் மற்றும் தெரிவுக் குழுக்களைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து,

தங்களுக்குத் தேவையானவாறு கையாண்டு வருகின்றது. எனவே, இப்போதாவது நாட்டின் 220 இலட்சம் மக்கள் இவர்களிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். இனிவரும் தேர்தல்களில் எந்தவொரு தரப்பிற்கும் கூடுதல் பெரும்பான்மை நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தேவையில்லை. சாதாரண பெரும்பான்மை இருந்தால் போதுமானது. ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி. அரசாங்கம் இன்று அதிகார மமதையுடன் செயற்பட்டு வருகின்றது. ஜனநாயக வழிமுறைகளின் ஊடாக ஆட்சியைப் பிடித்துவிட்டு, இன்று ஜனநாயகத்தை முடக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். தனிக் கட்சி ஆட்சியை நோக்கி நாட்டைக் கொண்டு சென்று கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளதால், இதற்கு இடமளிக்க முடியாது" - என்றார். (ச-44)

# டொலர் கடத்தல் ஒருவர் சிக்கினார்

பல்வேறு பெயர்களில் போலி நிறுவனங்களைப் பதிவுசெய்து, அதன் மூலம் பல மில்லியன் அமெரிக்க டொலரை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பிய நிதி மோசடி தொடர்பாக 35 வயதுடைய ஒருவர் வெள்ளவத்தைப் பகுதியில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட இரகசியத்தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட விரிவான விசாரணைகளை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மூலம் பெறப்பட்ட கறுப்புப்பணம், இந்தப் போலி நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு, பின்னர் டொலராக மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் படி, கடந்த 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் 2025 செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 89 உள்ளூர் நிறுவனங்கள் எவ்வித பொருள்களையும் இறக்குமதி செய்யாமல் டெலிகிராபிக் டிரான்ஸ்பர் மூலம் பல மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

# ஆனி உத்தர உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஆனி உத்தர உற்சவம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது. காலை 7.30 மணியளவில் நடராஜப் பெருமானுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நகுலைக் கூத்தன் ஆனந்த தாண்டவத்துடன் உள் வீதி எழுந்தருளும் திருக்காட்சி இடம்பெறும். (ச-66)

# கும்பாபிஷேகப் பெருவிழா!

மன்னார்,ஜூன் 22

மன்னார் கௌரி அம்பிகை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோவில் ஆனி உத்தர மகா கும்பாபிஷேக 4 ஆம் ஆண்டு பூர்த்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகும். நடராஜப் பெருமானுக்குஅபிஷேகத்தைத் தொடர்ந்து, காலைச்சந்தி பூசையுடன் நடராஜப் பெருமான் உள் வீதியுலா எழுந்தருளல், காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகம் மற்றும் உச்சிக்கால பூசையுடன் விசேட வழிபாடுகள், இரவுத்திருவிழா மாலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூசையுடன் ஆரம்பமாகி பஞ்ச மூர்த்திகள் திருவீதியுலா எழுந்தருளல் இடம்பெறும். (க)




காலம் : 28.06.2026, ஞாயிறு

இடம் : சிவகாமி மஹால் திருமண மண்டபம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்

கட்டணம் : ரூபா 600

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

போட்டி தொடர்பான முழுமையான விபரங்களினை 0772999699 என்ற வற்சப் இலக்கத்திற்கு "Chess" என்ற குறுஞ்செய்தி அனுப்பி பெற்றிடுங்கள்



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

# முக்கிய அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரில் நாட்டின் பல பகுதிகளில் நிதி வசூலிக்கப்படுவதாக எமக்கு அடியார்களினூடாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் ஒரு தனிப்பட்டவருக்கோ அல்லது எந்தவொரு நிறுவன அமைப்புக்கோ நிதி வசூலிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகிறோம். தங்களிடம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரில் யாராவது நிதி வசூலிக்க வந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்கவும். ஆலயத்திற்கு பணத்தை செலுத்த விரும்பும் அடியார்கள் பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், நயினாதீவு என்ற முகவரிக்கு காசுக்கட்டளை மூலம் பணத்தை அனுப்பலாம் அல்லது கீழ்வரும் வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பு செய்து வைப்பு சான்றிதழை ஆலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்.

*A/C NO.012426285-01
Commercial Bank of Ceylon Ltd. Peoples Park,
Pettah, Colombo 11

*A/C NO.1060012330
Commercial Bank of Ceylon Ltd., Velanai Code - 05

*A/C NO.007687860
Bank of Ceylon, Velanai Code - 63

*DAILY ANNATHANAM
A/C NO.86645863
Bank of Ceylon, Velanai - 03
Code - 63

T.P.NO: 021 432 3440 OR 021432 3447

அன்னையின் சேவையில்
கனகசபை ஜீவசீலன்
கௌரவ செயலாளர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணி...

நேற்று அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளுடன், செம்மணி மனித புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புக் கூட்டுத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 405 ஆக உயர்ந்துள்ளது. அவற்றில் 377 மனித என்புக்கூடுகள் இதுவரை முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர். (அ-எ-26)

## பெண்களை...

விடுத்துள்ளனர். இதுதொடர்பான பல முறைப்பாடுகள் நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இணையவழியில் பெண்களுடன் நட்பை ஏற்படுத்தி, பின்னர் திருமண வாக்குறுதி வழங்கி பணம், நகைகளைப் பறித்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துதல் போன்ற குற்றங்கள் பதிவாகியுள்ளன. சில சந்தேகநபர்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் போதைப்பொருள் கலந்த பானங்களை வழங்கித் திருட்டுகளில் ஈடுபட்டுள்ளதோடு, இந்தக்குற்றங்கள் சில படுகொலைகளிலும் முடிவடைந்துள்ளதாகப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதையடுத்து, நாடளாவிய ரீதியிலுள்ள புலனாய்வு மற்றும் சமூகப் பொலிஸ் பிரிவினர் இவ்வாறான நபர்கள் குறித்துத் தீவிரக் கண்காணிப்பிலும் விழிப்புணர்விலும் ஈடுபட்டுள்ளனர்.

முகம் தெரியாத நபர்களுடன் தனிப்பட்ட விபரங்கள், புகைப்படங்கள் அல்லது காணொலிகளைப் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும், இணையவழி நபர்களிடம் பணம், நகைகள் அல்லது பெறுமதியான பொருட்களை ஒப்படைக்க வேண்டாம், சந்தேகத்துக்கிடமான அழைப்புகள் மற்றும் அறிமுகமில்லாதவர்களைச் சந்திப்பதில் எச்சரிக்கை தேவை என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இது தொடர்பான தகவல் அறிந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கோ அல்லது 118, 119, 107, 109 ஆகிய அவசர எண்களுக்கோ தொடர்புகொள்ள முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

## வருகின்றது...

னர் 30 ஆம் திகதிவரை நாட்டில் தங்கி இருந்து முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத் தலைவர் இவான் பாபகியோர்கியோ தலைமையிலான குழுவே இலங்கை வருகின்றது. இந்த ஒரு வார காலப் பயணத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் இலங்கை அரசு அதிகாரிகள் மற்றும் பிற முக்கியமான பங்குதாரர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்யவும், இலங்கையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்களின் நிலைப்பாட்டை மதிப்பிடவும் இந்த சந்திப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன. இலங்கை அரசுடன் மிகவும் ஆக்கபூர்வமான மற்றும் பயனுள்ள கலந்துரையாடல்களை நடத்த தங்களது குழு ஆர்வமாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுத் தலைவர் இவான் பாபகியோர்கியோ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அடுத்தகட்ட நிதி உதவி திட்டங்களுக்கு இந்த அதிகாரபூர்வ அளவிலான சந்திப்பு மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. (அ-எ-44)

## திரும்பியது...

இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த ஐந்து கப்பல்களில், ஒரு கப்பலின் நிலக்கரி தரச்சான்றிதழ் திருப்திகரமாக இல்லாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்கான மாற்று நிலக்கரி கப்பலை இலங்கைக்கு அனுப்ப அந்த நிறுவனம் உறுதியளித்துள்ளதுடன், கடல் சீற்றம் காரணமாக அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலைவரப்படி, 22 கப்பல்களிலிருந்து நிலக்கரி வெற்றிகரமாக இறக்கப்பட்டுள்ளதோடு, 23ஆவது கப்பலின் நிலக்கரி இன்று இறக்கப்படவுள்ளது.

எனவே, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை மின்சார உற்பத்தியைத் தடையின்றித் தொடரத் தேவையான குறைந்தபட்ச நிலக்கரி கையிருப்பு நாட்டில் உள்ளதாக வலுசக்தி அமைச்சு உறுதியளித்துள்ளது. இதன் காரணமாக செப்ரெம்பர் மாதம் வரை அவசர மின் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் எழாது என்றும் அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது. (அ-எ-இ)

## அரசாங்கத்தை...

காமை எதிரணிகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் எதிரணிகள் இணைந்து சபாநாயகரிடம், கையளித்த கடிதத்துக்கும் அரச தரப்பில் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு எதிரணி வசம் பெரும்பான்மை பலம் இல்லை. எனவேதான் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நாளை கூடவுள்ளது. அங்கு எதிரணிகள் ஆராய்ந்து, முடிவொன்றை எடுக்கவுள்ளன என்று தெரியவருகின்றது. எதிரணிகளின் நாடாளுமன்றக் குழு கூட்டங்களும் நாளை நடைபெறவுள்ளது. அதிலும் இது பற்றி ஆராயப்படவுள்ளது. (அ-எ-44)

## இலங்கைக்கு...

இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதுடன், கொழும்பு துறைமுகத்துக்கும் நேரடிகள ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்க செனட் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக போல் கபூர் சமர்ப்பித்திருந்த பிராந்திய பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த விவரங்களை நேரில் ஆராய்வதே இந்தப் பயணத்தின் நோக்கம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அதே... கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் தற்போதைய கட்டுமானப் பணிகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் அவர் விரிவாகக் கலந்துரையாடவுள்ளார்.

கடந்த மாதம் அமெரிக்கா வழங்கிய கடலோரக் காவல் கப்பலை ஒப்படைக்கும் விழாவில், அதிபர் டொனல்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதர் செர்ஜியோ கோர் கலந்து கொள்ளவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் அந்த நிகழ்வைத் தவிர்த்திருந்தார். இந்தப் பின்னணியில் போல் கபூரின் இந்த வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

தெற்காசிய பாதுகாப்பு மற்றும் மூலோபாய விவகாரங்களில் நீண்ட அனுபவமிக்கவரான போல் கபூர், 2025 ஒக்ரோபர் மாதம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## அதிகாரத்துக்காக...

அதிகாரத்துக்காக ராஜபக்சக்கள் எதையும் செய்வார்கள். தமது திட்டங்களுக்கு துணை நிற்கும் தரப்பின் பிள்ளைகள் மற்றும் மனைவிகளையும் அவர்கள் தமது நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்வார்கள். சுரேஷ் சாலே விடயத்திலும் இதுதான் நடக்கின்றது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குற்றம் இழைத்தவர்கள் தாமாக முன்வந்து கருத்துகளை வெளியிடப்போவதில்லை. எனவே, அவர்களிடமிருந்து தகவல்களை சட்டபூர்வமாக பெறுவதற்குரிய வழிமுறை உள்ளது. இது விசாரணை அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். உலகில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட முதல் நபரா சுரேஷ் சாலே?

தமது மனைவி மற்றும் பிள்ளைகள் பற்றி சுரேஷ் சாலேவுக்கு அக்கறை இருந்தால் அவர் தகவல்களை வழங்க வேண்டும். தனது பிள்ளைகள் மற்றும் மனைவி தொடர்பான தகவல்களை சுரேஷ் சாலே மறைக்கவில்லை. சாலே ஜனாதிபதி ஆகுவதற்கு அல்ல, வேறு தரப்பொன்றுக்காகவே இது (உயிர்த்த ஞாயிறு தாக்குதல்) செய்யப்பட்டிருக்கும்.

ஏப்ரல் 21 குண்டு வெடிப்பு இடம்பெற்றது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றிய கருத்தை ஏப்ரல் 23 கோத்தாபய ராஜபக்ச வெளியிட்டார். தமக்காக அதிகம் சேவை செய்தவர்களின் பிள்ளை மற்றும் மனைவிமாரையும் ராஜபக்ச குடும்பம் பயன்படுத்திக்கொள்ளும். தமது குற்றங்களுக்காக அவர்களை பயன்படுத்தக்கூடும்.

தாக்குதலுக்கு திட்டமிடாமல், சஹ்ரான் குழுவுக்கு விருந்து வைக்காமல், சம்பளம் வழங்காமல் இருந்திருந்தால் சாலே வீட்டில் இருந்திருக்கலாம்-என்றார். (அ-எ-44)

## பல...

குற்றச் சட்டம் மற்றும் சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களும் இவற்றுள் அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சமூக ஊடகத் தளங்கள் ஊடாக தனிநபர்கள் மீது நடத்தப்படும் மோசமான மற்றும் தரக்குறைவான தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கே நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன. கருத்துச் சுதந்திரத்தையோ அல்லது பேச்சுச் சுதந்திரத்தையோ முடக்குவது இந்த திருத்தங்களின் நோக்கமல்ல என்று தெளிவுபடுத்தினார்.

இணையவழிக் குற்றங்கள் தொடர்பாக நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் தற்கால சவால்களை எதிர்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், காலத்துக்கு ஏற்ற வகையில் அந்தச் சட்டங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோரால் இந்த சட்ட வரைவுகள் கூட்டாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (அ-எ-இ)

## திட்டமிட்ட...

அவசியமில்லை என்றும் விளக்கமளித்துள்ளது. தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் படி, உயர்தரப் பாடத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு 300 பாடசாலை நாள்கள் போதுமானதாகும். ஆனால், 2026 உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை மொத்தம் 343 பாடசாலை நாள்கள் உள்ளன என்று கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோன்று, இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவையாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கும், கடந்த பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இம்முறை பரீட்சை ஆரம்பமாகும் நாள் வரை 4 மாதங்களும் 10 நாள்களும் இடைவெளி கிடைத்துள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. இதனடிப்படையில், ஏற்கனவே திட்டமிட்டபடி ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும் என்றும், அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் கல்வி அமைச்சு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## எஸ்.ரி.எப். ...

சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் உட்பட 14 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர், மணல் அகழ்வில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை உழவு இயந்திரத்துடன் கைது செய்ய முற்பட்டபோது இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்போது, கைது செய்யப்பட்டவரின் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் விசேட அதிரடிப்படையினரைத் தாக்கினர் என்று கூறப்படுகிறது. இதற்குப் பதிலடியாக, அங்கிருந்தவர்கள் மீது அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும், பின்னர் அனைவரையும் கைது செய்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரு சிறுவர்கள், அவர்களது பெற்றோர், பாடசாலை மாணவிகள் மற்றும் முதியவர்கள் என மொத்தம் 14 பேர் கைது செய்யப்பட்டு, இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்டோர் வேதனைக்கு அரசாங்கம் முன்னுரிமையில் தீர்வு!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 22**

**காணாமல் போனோரின் உறவினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அரசாங்கத்தின் சொந்தப் பிரச்சினைகளாகக் கருதப்பட்டு அவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்படும் எனக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார மற்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரின் பங்கேற்புடன், யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகளுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் பணியாளர்கள் மிகவும் சவாலான சூழ்நிலைகளில் பணியாற்றி வருகின்றனர். காணாமல் போனவர்கள் வெறும் எண்ணிக்கைகள் அல்ல, அவர்களது குடும்பங்கள் நீண்டகால மனவேதனையுடனும் எதிர்பார்ப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 2,452 பேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்று பதிவாகியுள்ளன. பதிவு செய்யப்படாத பல சம்பவங்களும் இருக்கக் கூடும். உடல் காயங்களுக்கு மருந்து வழங்க முடியும். ஆனால் மனக் காயங்களுக்கு உண்மையான மருந்து அன்பும் நீதியும் மட்டுமே. காணாமல் போனோரின் உறவினர்களின் வேதனையை பணத்தால் ஈடுசெய்ய முடியாது. தென் இலங்கையிலும் 1987-1989 காலப்பகுதியில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மக்கள் எதிர்நோக்கும் இந்த மனவேதனைக்கு உரிய தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.- என்றார். (ச-26)

காணி விற்பனைக்கு

சிவப்பிரகாசம் வீதியில்
1 1/2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 431 7727

(CS/61710) J-1

# ஓய்வூதியம் இல்லாமல் திண்டாடுகிறேன்

## மைத்திரி தெரிவிப்பு

ஓய்வூதியமும் இரத்து செய்யப்பட்டுவிட்டது. பொருள்களின் விலையேற்றத்தால் நானே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் தற்போது செயற்பாட்டு அரசியலில் இல்லை. எவராக இருந்தாலும் பரவாயில்லை, நாட்டை கட்டி யெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தால் அதனை வரவேற்க முடியும். எனக்கு ஓய்வூதியத்தையும் இல்லாது செய்துவிட்டனர். சிறப்புரிமைகளும் இல்லை. எரிபொருள் விலையேற்றம் உட்பட பொருள்களின் விலையேற்றத்தால் நான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளேன் - என்றார். (ச-44)

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2028

A/L தொழில்நுட்பப் பிரிவு


- ஆரம்பம் - 24.06.2026 (புதன்கிழமை)
- நேரம் - மாலை 3.30

A/L - 2027
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: 077 017 5346

(cr 47720) (H-1)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை அம்மையப்பர்

(அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் எழுது வினைஞர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ வட்டு இந்து கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, பரந்தன் குமரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் நீராவியடி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வடக்கு வீடு, அராலி தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அம்மையப்பர் அவர்கள் கடந்த 20.06.2026 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் காரைக்காலம்மையார் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பர்வதவர்த்தினி ஆகியோரின் அன்பு மருமகனும், சிதம்பரவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னபூரணி, காலஞ்சென்ற சம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், மேரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி, காலஞ்சென்ற அரிச்சந்திரன், சங்கரப்பிள்ளை, அபிராமி, குமாரசாமி, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரா, சிவகுமாரன், சித்திரா, கௌரி, காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபால் சங்கரப்பிள்ளை, தயாபரி, சர்வானந்தன், தேவசேனாதிபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், விநோதன், வாணி -நீல், அரன், சிவகரன், சிவஜீவன் - ஜயனி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும், ஆஷா, டிலான் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2026) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10.30 மணியளவில் அராலி தெற்கு, பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**பிறப்பு**
**18.01.1932**

**இறப்பு**
**20.06.2026**

வடக்கு வீடு,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/61721) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.